முடியாததற்குக் காரணம் அதிலே பயணிகள் அதிகமாக இருக்காது என்று ஆய்வு செய்ததன் காரணமாக இயக்கமுடியவில்லை என்ற கருத்தை நான் இங்கே கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

106--

கிருட்டிணகிரி நீர்த்தேக்கத்தில் இருபுறக் கால்வாய்களில் தூர் எடுத்தல்.

14532–திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிருட்டிணகிரி நீர்தேக்கத்தில் இருபுறக் கால்வாயும் தூர் எடுக்காததால் தண்ணீர் சேதமாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி நீர்த் தேக்க இருபுறக் கால்வாய்களிலும் தூர் வாரும் பணிகளுக்காக 1993, 1994-ஆம் ஆண்டுகளுக்கு ரூ. 2,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயலாக்குதலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வேலை முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கால்வாய்களில் இப்போதுகூட தண்ணீர் சீராகச் சென்றுகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தக் கால்வாய் 1952 ஆம் ஆண்டிலே வெட்டப்பட்ட கால்வாய் ஆகும். இந்தப் பிரதானக் கால்வாயிலிருந்து கிளைக் கால்வாய்களுக்கு செல்லக்கூடிய இடங்களில் உள்ள மதகுகள் 1952ஆம் ஆண்டிலே போடப்பட்டதாகும். அந்த இரும்புக்கதவுகள் நிறைய இடங்களிலே பழுதுப்பட்டிருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் தேக்கம் அந்த இடங்களிலே அதிகமாகி கரைபுரண்டு வெளியிலே செல்கின்ற காரணத்தினால் ஆங்காங்கு நேரடியாக தண்ணீர் செல்லாமல் வேறு இடங்களுக்குச் செல்லக்கூடிய

1993 டிசம்பர் 31]

நிலைமை இருக்கிறது. எனவே இந்த மதகுகள் பிரிவில் இருக்கின்ற இரும்புக் கதவுகளை திட்டமிட்டு சீர் செய்துக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த சில்ட் கிளியரன்ஸ் என்று சொல்லப்படுகின்ற, மணல் அகற்றுகின்ற பணிகள் கால்வாயிலே நடைபெற்றிருக்கிறது. இரும்புக் கதவுகள், அதாவது, ஷட்டர்ஸ், பொருத்துகின்ற பணியினை எங்கெங்கு அந்த இரும்புக் கதவுகள், ஷட்டர்ஸ் மோசமாக இருக்கின்றனவோ, அவைகளை எல்லாம் சீர் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதற்கான மதிப்பீடுகளை அதிகாரிகள் தயாரித்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அடுத்த கட்டமாக ஷட்டர்ஸ் ரிப்பேர் செய்கின்ற பணி நடைபெறும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 25 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தக் கால்வாய்க்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சம், ரூ. 3 லட்சம் என்று அரசு ஒதுக்குகின்ற காரணத்தால் 4 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று தூர் எடுத்து விட்டு மற்ற பகுதிகளுக்கு தூர் எடுக்காத காரணத்தினால் தண்ணீர் தேக்கம் இருக்கிறது. அங்கு மணல், தூர் எடுக்கத் தேவைப்படுகிறது. எனவே 25 கிலோ மீட்டர்களுக்கு முறையாக ஒரே ஆண்டிலே தூர் எடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி அதற்குரிய நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கால்வாய்களையும் சீராக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். ஆனால் இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துத்தான் தமிழகம் முழுவதும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே ஒரு கால்வாய்க்கு மாத்திரம் நிதி ஆதாரங்களை ஒரே ஆண்டிலே ஒதுக்கிவிடமுடியாது. ஆகவே இருக்கின்ற நிதி வசதிகளுக்கு ஏற்ப பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தக் கால்வாய்க்கு உள்ள முக்கியத்துவத்தை ஆராய்ந்து தண்ணீர் வரத்திற்கு சிரமம் இல்லாமல் எந்த அளவுக்கு நிதி ஒதுக்கம் செய்து அதைப் பராமரிக்க முடியுமோ அதை இந்த நடவடிக்கை எடுத்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 107, திரு. ஆர். முருகையா பாண்டியன்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

107--

அம்பாசமுத்திரம் ராமநதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

20461-திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ராமநதியின் குறுக்கே வடக்கு பாப்பாங்குளம் கிராமத்தையும் ஆழ்வார்குறிச்சி பகுதியையும் இணைக்க ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநதியிலே கட்டப்படவேண்டிய பாலம் மிகவும் முக்கியமான பாலம். ஆழ்வார்குறிச்சியையும் பாப்பாங் குளத்தையும் இணைக்கக்கூடிய பாலம் இது. இந்த ஆற்றின் வழியாக பல லட்சம் பேர்கள் செல்கின்றார்கள். அந்த ஆற்றின் வழியாகத்தான் நடந்து சென்றுக்கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக, இந்தப் பாலத்தைப் போடவேண்டுமென்று அங்கேயுள்ளவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தின்படி தொகுதியிலே கட்டவேண்டுமென்ற அடிப்படையிலே, அந்தப் பாலத்தை இந்த ஆண்டு தேர்வு செய்திருந்திருந்தார்கள். டெண்டர் விடப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால் அதற்கு 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே இந்த ஆண்டு இந்த வேலை தொடங்கிவிடுவார்களா என்று கேட்கின்ற நேரத்திலே, 6 இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு செய்தோம். ஆனால்